சார்பு நீதிமன்றம், அருப்புக்கோட்டை.

OS No.90/2026

2026ம் ஆண்டு ஜூன் திங்கள் 22-ம் நாள் வாதி சாட்சியின் வாக்குமூலம் (1889ம் ஆண்டு சாட்சியச் சட்டம் எண்.44வது பிரிவு 5வது விதியின் ஏற்பாட்டின்படி) திருமதி.N.கௌரிமாரியம்மாள் கிரேடு 2 பெஞ்ச் கிளார்க் என்பவரால் ஆணையிட்டு சத்தியப் பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர் – நாகராஜன் (Pw1) | தொழில் |
| த/பெயர் | சமயம் |
| கிராமம் | சாதி |
| தாலுகா | வயது |

<u>**முதல் விசாரணை**</u>

நான் இந்த வழக்கின் வாதி ஆவேன். வாதி தரப்பு 1 வது சாட்சி ஆவேன். என்னுடைய சாட்சியத்தை பிரமாணவாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். இதைப்படித்து பார்த்து கையெழுத்து செய்துள்ளேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். என் பிரமாண வாக்குமூலத்தில் கூறியுள்ளவாறு 22.11.2023 ம் தேதியிட்ட எனக்கு பிரதிவாதி நிறைவேற்றி கொடுத்த புரோநோட்டு அசல் **வா.சா.ஆ.1**. 23.01.2026 ம் தேதியிட்ட நான் எனது வழக்கறிஞர் மூலம் பிரதிவாதிக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு அஞ்சல் ரசீதுடன் அலுவலக நகல் **வா.சா.ஆ 2**. மேற்படி அறிவிப்பை பிரதிவாதி பெற்றுக்கொண்டதற்கான அஞ்சல் ஒப்புதல் அட்டை அசல் **வா.சா.ஆ 3**. என்னுடைய ஆதர் அடையாள அட்டை ஜெராக்ஸ் **வா.சா.ஆ 4**. பிராதுப்படி தீர்ப்பாக

வேண்டுகிறேன்.

**<u>குறுக்கு விசாரணை :</u>** இல்லை.

| |
|---|
| என்னால் திறந்த நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.<br><br>சார்பு நீதிபதி,<br>அருப்புக்கோட்டை. |